**தலைப்பு 231 – கடன் இணக்கச்சபை திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கடந்த வருடம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த 12 சந்தர்ப்பங்களுக்கான கூட்டுத்தொகையில் 7,343,418 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாக இருக்கவில்லை.

(ஆ) இவ்வறிக்கையின் 1.6.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த வருடத்தில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் ரூபா 34,921 ஆன வைப்புக்கள் பெறுவனவு மற்றும் அக்காலத்திற்குள் ரூபா 29,303 ஆன வைப்புக்கள் கொடுப்பனவு சம்பந்தமாக திறைசேரிக்கு | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 6 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் ஏசீஏ-4 படிவத்தின் மூலம் 2019 திசெம்பர் 31 திகதிக்கான வைப்புக் கணக்கின் மீதி மற்றும் அத்திகதியில் திறைசேரிக் கணனி அச்சீட்டுக் குறிப்புக்களுடன் வைப்புக் | சனவரியிலிருந்து யூலை வரையான காலத்திற்குரிய சேகரிக்கப்பட்ட பிரதிகள் கட்டணப் பெறுவனவுகளின் நூற்றுக்கு 30 வீதம் உத்தியோகத்தர்களின் பணம் ரூபா 34,921 ஆனது வைப்புக் கணக்கின் பெறுவனவாக ரூபா 29,303 கொடுப்பனவு வைப்புக் கொடுப்பனவாகவும் பதியப்படவில்லை. இதனால் 2019 திசெம்பர் 31 ஆந் |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையிடப்படாமையினால் வருட இறுதியில் திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் வைப்புக் கணக்கில் ரூபா 5,617 எதிர்மறை மீதியாகக் காணப்பட்டது. | கணக்கின் மீதிகள் சமப்பட வேண்டியமை. | திகதிக்கு வைப்புக் கணக்கின் மீதி ரூபா 5,617 எதிர்மறையாக மதிப்பிடப்பட்டது. |
| (ஆ) | விடய இலக்கம் 23101 இன் கீழ் அரச உத்தியோகத்தரின் முற்பண ''பீ'' கணக்கில் மீளாய்வாண்டின் மொத்தப் பெறுவனவுகள் ரூபா 849,609 ஆனால் அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 449,978 ஆகக் காட்டப் பட்டிருந்தமையால் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 399,631 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வருடத்திற்குள் பணத்தால் மற்றும் குறுக்குப் பதிவுகளினால் பெறப்படும் சகல முற்பணப் பெறுவனவுகளும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | மீளாய்வாண்டின் பெறுவனவாக பணத்தால் அறவிடப்பட்ட ரூபா 499,978 ஆன தொகை மட்டும் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்ட காரணத்தினால் ரூபா 399,631 (குறுக்குப் பதிவுகளின் மூலம் பெறுவனவுகள்) குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (இ) | மீளாய்வாண்டிற்குள் ஏனைய பெறுவனவுகளின் மொத்தம் ரூபா 767,618 ஆன பிரதிகள் கட்டணப் பெறுவனவுகளின் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட ரூபா 58,741 ஆன தொகை குறைக்கப்பட்டு ரூபா 708,877 கணக்கிடப்பட்டமையால் நிதிச் செயலாளர் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் ரூபா 58,741 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 7(ii) பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமானம் சேகரிக்கப்படுவதுடன் ஏனைய திணைக்களங்கள் அவை சேகரித்த வருமானம் திறைசேரியின் பெறப்பட்ட கட்டுநிதியாகக் கருதப்பட்டு ஏசீஏ-03 படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டியமை | மீளாய்வாண்டில் திணைக்களத்தின் ஏனைய பெறுவனவுகள் ரூபா 767,618 என்பதுடன் பிரதிகள் கட்டணம் (ரூபா 195,804) ஆன பெறுவனவுகளில் ரூபா 58,741 இல் நூற்றுக்கு 30 வீதமான அளவு திணைக்கள உத்தியோகத்தருக்கு வழங்கப்படுகின்றது. அத்தொகை பொது வைப்புக் கணக்கில் தக்கவைத்து உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டதாக நிதிச் செயலாற்றல் கூற்றில் வைப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பெறுவனவுகள் ரூபா 708,877 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் சம்பளம், படிகள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் முழுச்செலவு காட்டப்படும் போது உள்நாட்டுப் பயணச் செலவுகளுக்காக ரூபா 100,000 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் அதற்குரிய ரூபா 55,330 ஆன மொத்தச் செலவுகள் உள்ளடக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. இதன் காரணத்தால் சம்பளம், படிகள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் மதிப்பீடு ரூபா 100,000 இனால் மற்றும் செலவுகள் ரூபா 55,330 இனால் கூட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவுகள் ரூபா 55,330 ஆல் மற்றும் அதற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூபா 100,000 ஆலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 6 ஆம் பந்தியின் பிரகாரம் ஏசீஏ-எப் படிவத்தின் கீழ் மீண்டெழும் செலவுகள் உள்ளடக்கப்படும் போது ஏசீஏ-2(ii) இன் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் செலவுகள் மற்றும் குறிப்பு 06 இன் கீழ் செலவுகளாக வேறாக காட்டப்பட வேண்டியமை. | நிதிச் செயலாற்றல் கூற்றில் சம்பளம், படிகள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களுக்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் செலவுகள் தொடர்பாக தவறுதலாக பயணச் செலவுகளுக்காக மதிப்பீடு மற்றும் செலவுகள் உள்ளடக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 100,000 ஆல் மதிப்பீடு, ரூபா 55,330 ஆல் செலவுகள் அதிகரித்தமை. ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மதிப்பீடு ரூபா 100,000 ஆல் மற்றும் செலவுகள் ரூபா 55,330 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரித்தான மோட்டார் வாகனம் சம்பந்தமான தகவல்கள் கடந்த வருடத்தில் அத்துடன் மீளாய்வாண்டில் நிதிசாரா சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்படாமையினால் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் கட்டிடக் கிரயம் மற்றும் உபகரண மீதி, கட்டிட கிரயம் மற்றும் உபகரணங்களின் கூட்டுத்தொகை மீதிகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | திணைக்களத்திற் குரித்தான அனைத்து நிதிசாரா சொத்துக்கள் கணக்கில் காட்டப்பட வேண்டியமை | இல 300-5479 ஆன மோட்டார் வாகனம் உபயோகிப்பதற்கு முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அம்மோட்டார் வாகனத்தை ஏலத்தில் விடப்படுவதற்காகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குள் வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 767,618 காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 382,261 ஆக காட்டப்பட்டமையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 385,357 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 7(ii) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வருடத்திற்குள் சேர்க்கப்பட்ட ஓய்வூதியச் சம்பளப் பங்களிப்புத் தொகையின் பெறப்பட்ட ரூபா 246,226 உம் கடன் மேலாண்மை வட்டியாக பெறுவனவுகள் ரூபா 84,940 உம் பிரதிகள் கட்டணங்கள் பெறுவனவு ரூபா 58,741 தொகை தவறுதலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளாக குறிப்பிடப்படாத காரணத்தினால் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 389,907 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது. மேலும், தவறுதலாக ரூபா 4,550 |

| | | |
|---|---|---|
| | | ஆன அரச உத்தியோகத்தரின் முற்பணம் தீர்க்கப்பட்டமை குறிப்பிடப்பட்டதன் காரணமாக வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 382,261 ஆக தவறுகளுடன் குறிப்பிடப்படுகின்றது. |
| (ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளினால் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் மீளாய்வாண்டிற்குள் ரூபா 449,978 ஆன முற்பணம் அறவிடப்பட்டமை மற்றும் ரூபா 1,499,436 ஆன முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 6 ஆம் பந்தியின் பிரகாரம் ஏசீஏ - சீ படிவத்தின் முற்பணம் அறவிடப்படல் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட வேண்டியமை. | காசுப்பாய்ச்சல் தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறு காரணமாக முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் உருவான் காசுப்பாய்ச்சலின் கீழ் முற்பணம் அறவிடப்பட்ட ரூபா 449,978 மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் முற்பணக் கொடுப்பனவு ரூபா 1,499,436 ஆன மதிப்பீடு உள்ளடக்கப்படவில்லை. |

### 1.6.4 கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு ஒன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முன்னால் இவ்வாறான தவறுகள் ஏற்படாமலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 எல்லைகளை மிகைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விடய இலக்கம் 23101 ஆன அரச உத்தியோகத்தர்களின் முற்பண 'பீ" கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட குறைந்தபட்சம் பெறுவனவு எல்லை ரூபா 500,000 என்பதுடன் உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 449,978 ஆக இருந்தமையால் ரூபா 50,022 ஆல் குறைந்தபட்ச பெறுவனவு எல்லையை அடைந்து கொள்ள முடியாமல் போனது | அரச முற்பணம் நடவடிக்கைகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட வேண்டியமை. | குறைந்தபட்ச பெறுவனவு எல்லை ரூபா 449,000 ஆக திருத்தம் செய்வதற்காக தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் நிதி மற்றும் வெகுசனத் தொடர்பு அமைச்சின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக BD/AA/231/23101/09/2019 மற்றும் 2019 திசெம்பர்31 ஆந் திகதிய கடிதம் மூலம் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் வருடத்திலிருந்து 2019 வருடம் வரை கடந்த 5 வருடத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ள வழக்குகளின் சதவீதம் மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் 33 சதவீதத்திலிருந்து 37 சதவீதம் வரையிலான வீச்சிலான அளவைக் கொண்டிருந்தது. அந்த 5 வருடத்திற்குள் வருடாந்தம் திணைக்களத்திற்குப் புதிதாக கிடைத்த விண்ணப்பங்களின் | திணைக்களத்தை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோள் நிலையான ஆதனங்கள் சம்பந்தமாக அடகு வைத்தல், வாக்குறுதி உறுதிகள் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்கள் என்பன சம்பந்தமாக எழுதப்பட்ட உரிமை மாற்றல் உறுதிகள் ஏனைய கடப்பாடுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய கடன் சம்பந்தமாக | 2019 ஆம் ஆண்டில் கம்பஹாக் கிளை சபையினை தோற்றுவிப்பதற்கு தேவையான ஆகக் குறைந்த தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆனால் அதற்காக பயிற்சிக் கட்டிடம் பெறுகை செய்வதற்கு முடியாத காரணத்தினால் 2019 ஆம் வருடத்திற்குள் கம்பஹாக் கிளை சபையை தோற்றுவிப்பதற்கு முடியாமல் போயிற்று.<br><br>2020 சனவரி 16 ஆந் திகதி |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை மற்றும் மீளாய்வு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 394 இலிருந்து 464 அளவில் காணப்பட்டது. தீவின் 14 மாவட்டங்களில் 2019 வருடத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 409 என்பதுடன் அவற்றுள் கம்பஹா, குருநாகல் மற்றும் கொழும்பு மாவட்டங்களுக்கு உரித்தான பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முறையே 102, 69 மற்றும் 65 ஆகும். | சம்பந்தப்பட்ட தரப்பினரை இணக்கத்திற்கு வரச் செய்வதற்காக இருந்தமையால் அக்குறிக்கோளை நிறைவேற்றல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியமை. | கொழும்பு, கம்பஹா, காலி மற்றும் குருநாகல் கிளைச் சபைகளை தோற்றுவிப்பதற்கு கடன் இணக்கச் சபை உறுப்பினர்களின் செயலாளர், நீதிமன்ற, மனித உரிமைகள் மற்றும் சட்டப் புனரமைப்பு அமைச்சு மூலமாக நியமிக்கப்பட்டனர். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்பட்ட முழு வழக்குகளின் எண்ணிக்கை 821 என்பதுடன் அவற்றுள் நூற்றுக்கு 26 வீதம் மட்டுமான அளவு 3 வருடத்திற்கும் மேற்பட்ட பழைய வழக்குகள் ஆகும். பெரும்பாலும் இவ்வழக்குகள் தாமதமாவதற்கு தரப்பினரின் வருகை தராமை மற்றும் குறிப்பிட்ட சான்றுகள் பெறப்படுவதற்கு தாமதமாதல் போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன. | தாமதமின்றி வழக்குகள் தீர்க்கப்படுவதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். | கிளைச் சபைகளை தோற்றுவிப்பதன் மூலம் தரப்பினரின் கடன் இணக்கச் சபை எதிர்காலத்தில் தோற்றுவிப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்று நம்பப்படுவதுடன் அதனால் கடன் இணக்கச் சபையின் கோரிக்கைகள் அதிகமாக விசாரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 3 வருடங்களுக்கு அதிகமான பழைய வழக்குகள் என்பதுடன் சட்ட அடிப்படையான விடயங்கள் தொடர்பாக உயர்நீதிமன்ற கட்டளையை எதிர்பார்த்துக் கோரப்பட்டவை அதிக அளவிலாக காணப்பட்டதுடன் 2020 யூலை 14 ஆந் திகதி உயர்நீதிமன்ற கட்டளை பெறப்பட்டது. அதன் பிரகாரம் அக்கோரிக்கைகள் முடித்து வைக்கப்பட்டுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### 4.1 பதவியணியினர் வெற்றிடங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 8 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றுள் இரண்டாம் மட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட சுருக்கெழுத்தாளர் பதவிகள் மூன்றும் 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 3 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தேவையான பதவிகள் சம்பந்தமான வெற்றிடங்களை முழுமைப்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சுருக்கெழுத்தாளர் பதவி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்படுவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன. முகாமைத்துவ சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்பான 2019.11.27 திகதியில் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்குக் கோரிக்கை இடப்பட்டுள்ளது. |

### 4.2 மனிதவளங்கள் அபிவிருத்தித் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 சனவரி 24 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் அரச நிறுவனங்களில் மனிதவள அபிவிருத்தி செய்தல் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணைப்பு 02 ஆம் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சுற்றறிக்கையில் பின்னிணைப்பு 01 ஆம் | 2018 சனவரி 24 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் வருடத்திலிருந்து திணைக்களத்திற்காக மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிராமையுடன் 2020 வருடத்திற்காக சுற்றறிக்கைப் பிரகாரம் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| படிவத்தை அடிப்படையாகக் கொண்டு 2018 ஆம் வருடத்திலிருந்து செய்யப்பட வேண்டிய அனைத்து பதவியணியினர் தொடர்பாக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்தப்படுத்தலானது செயற்படுத்தப்படவில்லை. | | |

## 4.3 குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் செயற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அதிகளவு வினைத்திறனாகவும் மற்றும் பயனுறுதி மிக்கதாகவும் வழங்கப்படுவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக குடிமக்கள் வாடிக்கையாளர் சாசனம் முறையாகத் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படாமையுடன் அது சம்பந்தமான மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல் சம்பந்தமாக முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 05/2008 இன் பிரகாரம் குடிமக்கள் வாடிக்கையாளர் சாசனம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | 2020 ஆம் வருடத்திற்காக குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிப்பதற்கு மற்றும் அதன் பிரகாரம் செயற்படுத்தப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |